# இயல் - எட்டு

# அறிவியல்

# 8. அறிவியல்

அகிலத்தைப் படைத்து அதில் பலகோடி கணக்கான உயிரினங்களை உற்பத்தியாக்கி, அதற்கு உணவளித்து, காத்துப் பராமறித்துக் கொண்டிருப்பவன், இறைவன். அவ்வுலகில் பலகோடிக்கணக்கான மனிதர்களையும் படைத்து, மனிதனை நேர்வழியில் வாழக் கற்றுத்தர பல ஆயிரக்கணக்கான புனிதர்களான நபிமார்களையும் படைத்து இவ்வுலகத்தைக் காத்துக் கொண்டிப்பவனும் அவ்இறைவனே. அவ்இறைவன் படைத்தருளிய திருமறையில் அறிவியல் சார்ந்த கருத்துகளும் இடம்பெறுகின்றன. அவற்றை இவ்இயல் உரைக்கின்றது.

**பகுத்தறிவும் அறிவியலும்**

மனிதனுக்குப் பகுத்தறிவான ஆறாவது அறிவினை அளித்து அதன்வழிப் பல எண்ணங்களையும் அறிவியல் சிந்தனையும் ஆற்றலையும் அளித்துள்ளான். அத்தகைய சிறந்த ஆற்றலின் மூலம் மனிதன் இன்று ஐம்பூதங்களையும் தன்வசப்படுத்தி ஆட்சி செய்து கொண்டிருக்கிறான் என்ற சிந்தனையில் வாழ்ந்து கொண்டிருக்கிறான். இது உண்மையல்ல; இறைவனே மனிதனுக்கு இவ்வுலகத்தை வசப்படுத்தித் தந்துள்ளான். ஏனெனில், தம்மை மனிதன் வணங்குவதற்காகவே ஆகும்.

மனிதன் தாம் கண்டுணறும் புதுமையான சிந்தனைகளை அறிவியல் என்று கூறியும் தான் கண்டு பிடித்தது என்று நினைத்தும் பெருமை தேடிக் கொள்கிறான். ஆனால், உண்மை அதுவல்ல இறை திருமறையில்,

> மனிதன் அறியாதைவற்றையெல்லாம் கற்றுக்
> கொடுக்கிறவன் அவனே (அல்லாஹுᵘவே) (96:5)

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதம் நபி (அலை) அவர்களுக்கு அனைத்தையும் கற்றுக் கொடுத்ததாக அல்லாஹ் கூறுகிறான். ஆதம் நபியின் வழித் தோன்றல்கள் - மனிதகுலம் முழுமைக்கும் இது பரவியது.

கடந்த காலம், எதிர்காலம் குறித்த விஷயங்களையும் வாழ்வின் நோக்கம் மற்றும் கடமை குறித்தும் மறைவான மனிதன் அறியாதவற்றையெல்லாம் கற்றுக்கொடுக்கிறவனாக அல்லாஹுᵘ இருக்கிறான். 'மனிதனுக்கு எளிமையாகப்

புரியும் வண்ணம் அரபி மொழியில் அமைத்து அதனை நானே கற்றுத்தருகிறேன்' என்று கூறுகிறான்.

> நாம் குர்ஆனைக் கற்பதற்கு எளிதாக ஆக்கியிருக்கிறோம் உங்களில் எவரேனும் அதை கற்க விரும்புகிறீர்களா?
>
> மனிதர்கள் கவனித்துணர வேண்டும் என்பதற்காக நாம் அவர்களுக்கு அனைத்து வகையான உதாரணங்களையும் இந்தக் குர்ஆனில் இடம்பெறச் செய்திருக்கிறோம். அரபி மொழியில் உள்ள இந்தக் குர்ஆன் எந்த கோணலும் இல்லாதது அதனால் அவர்கள் நேர்மையாளர்களாக இருக்கலாம்
>
> (39:27, 28)

உலகத்தில் பலவகையான மொழிகளை மனிதன் பேசுகிறான். ஆனால் அரபி மொழியில் மட்டும் திருமறையினை இறக்கக் காரணமாக, 'அனைவரும் கற்றுணரவும், எந்தத் தவறுதலும் இல்லாமல் இறைவன் அருளியவாறு இருக்கவும், எளிமையாகப் புரிந்து கொள்ளவும்' இறைவனே குறிப்பிடுகின்றான். மேலும்,

> குர்ஆனை கற்றுக் கொடுக்கும் ஆசிரியர் (நானே)
>
> (55:2)

என்னும் வசனத்தின் வழி

படிப்பறிவில்லாத நபி (ஸல்) அவர்களுக்கு வானவர்களின் தலைவரான ஜிப்ரீல் (அலை) மூலம் திருமறையை உலகத்திலுள்ள மனிதர்கள் நேர்வழியைப் பெற அளித்த செய்தி பெறப்படுகிறது.

இவ்வசனத்தினை உற்று நோக்கும்போது முகம்மது நபி (ஸல்) அவர்களுக்கு இறைவனே திருமறையைக் கற்றுத்தந்தான். அவர்களின் மூலம் உலகலாவிய மக்கள் அனைவரும் கற்றனர் என்பது தெளிவாகிறது. இதனையே தாமே கற்றுத்தந்தோம் என்கிறான் இறைவன். இது போலவே ஒவ்வொரு வசனங்களையும் மனிதன் சிந்தித்துணரும் போது அறிவியல் ரீதியான உண்மை புலப்படுகிறது.

**வானமும் பூமியும்**

வானங்களையும் தன் கையடக்கத்தில் வைத்திருக்கக் கூடிய இறைவன் அதனுள்ளே இருக்கும் சிறு தூசுக்களானாலும் அது அவனது கையில் இல்லாமலில்லை என்கிறான்.

> ...ஒவ்வொரு அணுவின் எடையும் கூட அல்லாஹ்ஹுவின் கட்டுப் பாட்டிலேயே இருக்கிறது. வானங்களிலோ, பூமியிலோ, அணுவோ, அதைவிட சிறியதோ அல்லது பெரியதோ, அல்லாஹுவினுடைய மகத்தான பதிவு புத்தகத்தில் இல்லாமலில்லை
> (10:61,34:3)

> ...அல்லாஹ்விற்குத் தெரியாமல் ஒரு இலை கூட உதிர்வதில்லை அவனுக்கு தெரியாமல் ஒரு விதை கூட மண்ணிலிருந்து முளைப்பதில்லை (6:59)

இப்படி ஒரு சிறு துரும்பானாலும் என்னுடைய அனுமதியின்றி இவ்வுலகத்தில் இல்லை என்றும் கூறும் இறைவன் வானமும், பூமியும் உருவான நிலையினைப் பின் வரும் வசனங்கள் வழி உரைக்கிறான்.

> இந்த வானமும், பூமியும் ஒரு கணிசமான உருவமற்ற பொருளாக இருந்து, ஒரு மாபெரும் ஒலியுடன் வெடிக்க செய்து அதிலிருந்து வாழுமிடமாக நாம் பிரித்தோம் என்பதை நம்ப மறுப்பவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டாமா? மேலும் உயிர் வாழும் ஒவ்வொரு பொருளையும் தண்ணீரிலிருந்து படைத்தோம். அவர்கள் நம்பிக்கை கொள்வார்களா?
> (21:30)

> அவன் வானத்தின் பக்கம் திரும்பி வாயு போன்ற ஆவியிடமும் பூமியிடமும் கூறினான். வாழுமிடமாக விரும்பியோ அல்லது விரும்பாமலோ ஆகிவிடுங்கள் விரும்பிக் கட்டுப்படுகிறோம் என்றன (41:11)

இவ்வாறு உலகத்தை அமைத்த விதம் குறித்து இறைவன் மனிதர்களிடம் கூறுகின்றான்.

> வானங்களையும் பூமியையும் படைத்திருப்பதிலும் இரவும் பகலும் மாறி மாறி வருவதிலும், புத்திக்கூர்மை உள்ளவர்களுக்கு அதில் பல அத்தாட்சிகள் இருக்கின்றன (3:190)

மேற்கொண்ட வசனத்தினை மனிதன் ஆராய்ந்து பார்க்கும் போது அதில் பல அத்தாட்சிகளை கண்டுணர முடியும் என்கிறான் இறைவன்.

**பூமியின் வடிவம்**

> பூமி (கோள வடிவில்) பறவையின் முட்டையைப்போல ஆக்கப்பட்டிருக்கிறது (79:30)

என்று கோள வடிவில் பூமி அமைந்திருப்பதாகக் கூறும் இறைவன் மலைகளைப் பற்றி,

> நீங்கள் மலைகளைப் பார்கிறபோது அவை அசையாது நிலை நிற்பதாக கருதுகிறீர்களா? அவைகள் பயணித்துக் கொண்டிருக்கின்றன. மேகங்களைப் போலவே நகர்ந்து செல்கிறன! அப்படிப்பட்ட அமைப்பில் அல்லாஹ் செய்கிறவன். முழுமைப்படுத்துகிறான். அவன் நீங்கள் செய்கிற அனைத்தையும் பார்ப்பவனாக இருக்கிறான் (27:88)

என்பதாய்க் கூறுகிறான்.

**காலத்தைக் கணிக்கும் முறை**

காலத்தைக் கணிப்பதற்கும் சூரியனைப் பகலிலும் சந்திரனை இரவிலும் அமைத்து உங்களுக்கு ஒளிவீசும் வண்ணம் அமைத்துள்ளோம் என்றும் சந்திரனின் மூலம் காலத்தைக்க கணித்துக் கொள்ளும் வண்ணம் அமைத்துள்ளோம் என்றும் உரைக்கிறான் இறைவன். இதனை,

> காலத்தையும் அதனை கணக்கிடும் வழிமுறைகளையும் நாமே ஏற்படுத்தித் தந்தோம். நாம் இவ்வாறு எல்லாவற்றையும் விரிவாகக் கூறியுள்ளோம் (17:12)

> ...சூரியனைப் பகல் நேரத்து ஒளிரும் விளக்காகவும் சந்திரனை இரவு நேரத்து (பிரதிபலிக்கும்) விளக்காகவும் நட்சத்திர மண்டலங்களையும் அல்லாஹு ஆக்கியுள்ளான். (10:5,71:16,25:61)

என வரும் இறை வசனங்கள் காட்டுகின்றன. இரவையும் பகலையும் எவ்வாறு அமைக்கப்பட்டன என்பதை,

> ...அல்லாஹ் இரவை பகலுக்குள் புகுத்தினான் பகலை இரவுக்குள் புகுத்தினான் பகலை சந்திரனையும் உங்களுக்கு சேவை செய்வதற்காக அமைத்தான். அவை திட்டமிட்ட வரையறைகளின் படி குறிப்பிட்ட தவணை வரை இயங்கும் (31:29)

என வரும் வசனம் காட்டுகிறது.

இங்ஙனம் படைத்து இறைவன் சந்திரனின் மூலம் காலத்தைக் கணிக்கும் நிலையினைக் கூறுகின்றான் மேலும் வானங்களின் எண்ணிக்கையையும் பூமியிகளின் எண்ணிக்கையையும் குறித்து,

> ...சந்திரனின் பல நிலைகள் மக்களுக்கு காலத்தை கணித்திடும் வழி முறைகளுக்கு பயன்படுகின்றன (2:189)

> அல்லாஹ் 7 வானங்களையும் படைத்தான். அதே எண்ணிக்கையில் (7) பூமிகளையும் படைத்தான் (65:12)

என்னும் வசனங்கள் மொழிகின்றன. இறைவன் வானத்தையும் பூமியையும் அதே நேரத்தில் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் காலம் நேரத்தை கணிக்கும் முறை போன்றவற்றைத் திருமறையில் தெளிவாக எடுத்துரைக்கின்றான். இது மனிதனின் கண்டுபிடிப்பில் அறியலாகும் அறிவியல் ரீதியான உண்மையுமாகும்.

**உயிரினங்களின் படைப்பு**

உலகத்தை இறைவன் 6 நாட்களில் 'குன்'[1] என்ற ஒரு சொல்லின் மூலம் உருவாக்கினான் அவன் படைத்த அத்தனையும் மனிதன் அறிந்தது அறியாதது

உயிருள்ளது உயிரற்றது ஆகிய அனைத்தையும் இணையாகப் படைத்துள்ளதாக இறைவன் கூறுகிறான். இதனை,

> ஆண் - பெண் ஆகிய இருவகையினரை அவனே படைத்தான் (53:45)

எனும் வசனத்தின் வழி அறியலாகிறது.

**முதல் இணை**

> அவன் ஒரு வரை படைத்து பின் அவரது துணையை படைத்து அவர்களிலிருந்து உங்களையெல்லாம் படைத்தான் (30:6)

மனித குலத்தில் ஆதமிடமிருந்து துணையாக ஏவாளை படைத்ததாக அல்லாஹுஃ கூறுகின்றான்.

> அவனே, உங்களை ஒரே மனிதரிலிருந்து படைத்தான். அவருடன் கூடி (இணைந்து) வாழ்வதற்காக அவருடைய துணைவியை (அவரிலிருந்தே) படைத்தான். (7:189)

**தாவரங்கள்**

மனிதனைப் படைத்தது போலவே மிருகங்கள், பறவைகள், மீன்கள், புழு பூச்சிகள் ஆகிய அனைத்து உயிரினங்களும் ஆண் - பெண் எனும் இணையாகவே படைக்கப்பட்டிருக்கின்றன.

> பூமியில் பல்வேறு கனிவர்க்கங்களின் கனிகளிலிருந்து ஆண், பெண் ஜோடிகளை உருவாக்கினோம் (13:3)

என வரும் திருமறை வசனம் இதனை உரைக்கிறது.

**உயிரற்ற பொருட்கள்**

பூமி, வானம், இரவு பகல், சூரியன் சந்திரன், ஆண் பெண், மேலும் விலங்குகளிலும் பறவைகளிலும் தாவரங்களிலும் இன்னும் பல்வேறு பெரிய உயிரினங்களிலிருந்து நுண்ணியிரி வரை அனைத்திலும் இறைவன் இணையாக படைத்துள்ளான் இதில் உயிருள்ளவையும் உயிரற்றவையும் அடங்கும். இதனை,

எல்லாவற்றையும் நாமே, ஜோடிகளாகப் படைத்துள்ளோம். நீங்கள் சிந்தித்து உணர்ந்து அறிய வேண்டும் என்பதற்காக (51:49)

என்ற வசனம் காட்டுகிறது.

**ஆன்மாக்கள்**

மனிதர்களின் மனதளவில் நன்மை தீமைகளை உணரக்கூடிய நிலையிருப்பதுண்டு ஏனெனில் இதனை அனைவரும் அறிவர், இதில் நாம் ஒன்றைச் சிந்திக்கும் போது அதற்கு முரணாக மற்றொரு சிந்தனை ஏற்படும் இதனை இஸ்ஸாம் கூறுகிறது. சைத்தானின் வழி கேடு என்கிறது இறைவன் மனிதனில் ஆன்மாவை கொடுத்தான், ஆனால் அதனைப் போல சைத்தானின் ஆன்மாவும் மனிதனின் உடலில் வந்து புகுந்து கொண்டுள்ளது. ஏனெனில் மனிதன் நன்மை செய்பவனாகவும் தீமை செய்பவனாகவும் தம் மனசாட்சியின் நிலையினை பொறுத்தே அமைத்துக் கொள்கிறான். இறைவன் இதனைக் கொண்டே நன்மை தீமைகளை மனிதனுக்கு அளிக்கிறான். இதனை ஆன்மாக்களின் ஜோடி என்றுணரலாம்.

**தடைசெய்யபட்ட உணவுகள்**

சில உணவு வகைகளை மனிதர்கள் உண்ண திருமறை தடை விதித்துள்ளது. அறிவியல் நோக்கில் ஆய்ந்தால் அவ்வுணவுகள் மனிதனுக்கு தீங்கும் உபாதையும் விளைவிப்பதை அறிய முடிகிறது.

**பன்றியின் இறைச்சி**

பன்றியின் இறைச்சி கிருமி நிறைந்ததாக இருக்கிறது (2:173,6:145,5:3)

என வரும் வசனம் பன்றி இறைச்சியின் தீங்கினை விவரிக்கின்றது.

பன்றியின் இறைச்சியில் ஒரு வகையான கொழுப்பு படிமங்கள் உள்ளது. அதில் இருக்கும் கிருமிகள் அதன் மாமிசத்தை தீயில் இட்டு எப்படி சமைத்தாலும் அதில் உள்ள பாக்டீரியாக்கள் சாகாமல் உயிர் பிளைக்கின்றன. இதனால் மனிதர்களுக்கு கெடுதல் உண்டாகின்றது. மேலும் “பன்றிகளின் எச்சில் (உமிழ்நீர் மலம் சிறுநீர் ஆகியவற்றின் கிருமிகள், காற்றிலும் நீர் நிலைகளிலும் கலந்து விடுகின்றன. குறிப்பாகக் குழந்தைகளைத் தாக்கும்

மூளைக்காய்ச்சல் பரப்பும் வைரஸ்கள் பன்றிகளின் கூடாரங்களிலிருந்து வெளிப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

$H_1$ $N_1$ வைரஸ் மனிதர்களுக்குப் பன்றிக் காய்ச்சலைத் தோற்றுவிக்கிறது. பன்றியின் உடலில் உருமாற்றம் அடைந்த $H_1N_1$ இன்று மனிதர்களைத் தாக்குகிறது.

அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் வெள்ளைக் கோதுமை மட்டுமே உணவாக உட்கொள்ளும் பன்றிப் பண்ணைகள் நிறைய இருந்தன. பன்றி இறைச்சி விரும்பி உண்ணப்படும் சிறந்த ஐரோப்பிய உணவுகளில் ஒன்றாக இருந்தது.

மேற்கண்ட ஆராய்ச்சி முடிவுகள் அறிவிக்கப்பட்ட பிறகு பன்றிப் பண்ணைகளெல்லாம் இழுத்து மூடிவிட்டார்கள்

நம் நாட்டில் பல மாநிலங்களில் மாவட்ட ஆட்சியாளர்கள் பன்றிகளைக் கொல்ல உத்தரவிட்டுள்ளார்கள் பன்றி வளர்ப்பை தடை செய்துள்ளார்கள்”[2] என்கிறார் உமர் மு.ஃ.தார்.

பன்றி இறைச்சி உண்பதன் மூலம் பல நோய்களைப் பெற்றுக்கொள்ளும் நிலை உண்டாகின்றது. எனவே இப்படிப்பட்ட உணவை இறைவன் உண்ண வேண்டாம் என்று தடை செய்துள்ளான்.

**தானாக இறந்த உயிர்கள்**

தானாக இறந்த விலங்குகளில் ரத்தம் வெளியேறுவதில்லை. ஏனெனில் அந்த ரத்தமானது விலங்குகளின் உடலில் இருக்கும் திசுக்களுக்கு இடையே தங்கிவிடுகிறது. ரத்தம் இறைவனால் தடைசெய்யப்பட்டதாக இருக்கிறது. தீய நுண்ணுயிரிகள் அனைத்தும் ரத்தத்தில் தங்கி திசுக்களுக்கு இடையில் செல்களுக்கிடையே உறைந்து விடுவதாலும் திசுக்களுக்கு மரண விரைப்பு ஏற்பட்டு முறுக்கிக் கொள்வதாலும் கிருமிகள் ரத்த உறை படிமானங்களில் திசுக்களுக்கிடையே தங்கி விடுவதாலும் நோய்கள் பரவும் அபாயம் உள்ளது. இறைவன் திருமறையில் தடுக்கப்பட்ட உணவாகப் பின்வருமாறு கூறுகிறான்,

> தானாக செத்த பிராணிகளும், வெளியேறும் ரத்தம்,
> பன்றியின் இறைச்சி, அல்லாஹ்ஷ அல்லாதவற்றுக்கு

பலியிடப்பட்ட பிராணிகள், கழுத்து நெறிபட்டு செத்தது மிக உயரத்திலிருந்து கீழே விழுந்து செத்தது குத்தித்துளைத்து கிழிந்து சிதறிச் செத்தது, கொடிய மிருகங்களால் தாக்குண்டு இறந்தது. இவை சாகும் முன்பாக நீங்கள் காப்பாற்ற முடிந்தால் ஒழிய பலி பீடங்களில் வெட்டப்பட்ட பிராணிகள் மேலும் சூதாட்டத்தில் பங்காகக் கிடைக்கும் மாமிசம் ஆகியவற்றை உண்பது இறை நிந்தனையான செயலாகும். இவை உண்பதற்கு தடை செய்யப்பட்டிருக்கின்றன…

ஒருவர் தடுக்கப்பட்ட உணவுகளை பாவம் என்பது தெரிந்தே ஆனால் பாவம் செய்ய வேண்டும் என்ற நோக்கம் இல்லாமல் வறுமையின் காரணமாக உண்ண நேர்ந்தால் அல்லாஹ் மன்னிப்பவனாகவும் கருணையாளனாகவும் இருக்கிறான் (5:3)

மேலும் தானாக இரந்த உயிரிகளைச் சமைத்து உண்பதன்மூலம் உணவின் சுவையும் கெட்டு விடுகிறது. "அல்லாஹு ரஸுல் (ஸல்) வழிமுறை பிராணிகளின் கழுத்தை அல்லாஹுவின் திரு நாமத்தைக் கொண்டு ஓதி அறுப்பதாகும்"[3] என்று உமர் மு.ஃ.தார் என்பவர் குறிப்பிடுகிறார். அதிக வலியில்லாமல் அறுக்க வேண்டும். இரத்தத்தை வடித்து விட்டு விலங்குகளின் தோலுரித்து சுத்தப்படுத்தி உணவாக்க வேண்டும்.

"இஸ்லாமிய முறையிலான மாமிச உணவு சுவையாகவும் சுகாதாரமாகவும், இறைவனுக்கு உகந்த முறையிலும் இருக்கிறது.

அறிஞர் பெருமக்கள் இஸ்லாமிய வாழ்வியல் கலாச்சார நடைமுறை ஒவ்வொன்றையும் இதய சுத்தியோடு அங்கீகரிக்கிறார்கள்.

பகுத்தறிவு பூர்வமானது விஞ்ஞான அடிப்படையிலானது என்றும் புகழ்கிறார்கள்"[4] என்று திருக்குர்ஆன் விஞ்ஞான அற்புதங்கள் என்னும் நூல் உரைக்கிறது.

இறைவன் திருமறையில் குறிப்பிடும் தடுக்கப்பட்ட உணவுகளை அறிவியல் அறிஞர்களும் ஆராய்ச்சியாளார்களும் ஆய்வு செய்து அதில் உள்ள குறைபாட்டினாலும் பாதிப்பினாலும் இவ்வுணவுகளைத் தடை செய்துள்ளனர்.

**தண்ணீர்**

தண்ணீர் மனிதன் பருகுவதற்கு ஏற்ற பானமாகவும் இன்னொன்று பருக இயலாமலும் உள்ளது. அவை சுவை மிக்க நல்ல நீர், மற்றொன்று உப்புநீர், கடல்நீர் ஆகும்.

> காற்றையும் மழையையும் கொடுத்து இந்தப் பூமியை வளங்கள் நிறைந்ததாக, வாழுமிடமாக நாமே ஆக்கினோம்
>
> தண்ணீரிலிருந்து உயிரினங்களை உண்டு பண்ணினோம் தாவரங்களையும், பிராணிகளையும், பறவைகளையும், மீன்களையும் ஏற்படுத்தினோம்,
>
> சுத்தமான குடிநீரை ஏற்படுத்தினோம் (25:49)
>
> கலக்க முடியாத தடுக்கப்பட்ட இரண்டு கடல்களை அருகருகே வைத்தோம் (25:53)
>
> அல்லாஹ் பூமிமை மனிதர்கள் வாழுமிடமாக ஆக்கினான், அதன்மீது நதிகளை ஓடச்செய்தான். மலைகளை நங்கூரமிட்டான். கடலுக்குள் தடுப்பு ஒன்றை ஏற்படுத்தி இரண்டு விதமான நீர்களும் கலக்க முடியாதபடி படைத்தான். அல்லாஹ்வைத் தவிர அவர்கள் இணைவைக்கும் எந்த கடவுளாவது இதனை செய்திட முடியுமா? உண்மையாகவே நிறையப்பேர் இதனை அறியாதவர்களாகவே இருக்கிறார்கள் (27:61)

என்று இறைவன் தண்ணீர் படைப்பு நிலையை பற்றி குறிப்பிடுகிறான்,

“ஒன்று பருகுவதற்கு மதுரமான தண்ணீர் இன்னொன்று உப்பு தண்ணீர், இரண்டு கலக்க முடியாத படி கடலுக்குள்ளேயே சுத்தமான நீர் ஓட்டம் செல்வதை சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்புதான் விஞ்ஞானிகள் கண்டறிந்தனர்”[5]

இதனை இறைவசனம் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே மொழிந்துள்ளது.

தண்ணீர் மற்றும் பானங்கள் பருகும்போது நபி (ஸல்) அவர்கள் கற்றுத் தந்த நெறிகளை கடைபிடித்தல் ஒரு முஸ்லீமின் கடமையாகும்.

1. பிஸ்மி சொல்லி அருந்துவது
2. தலை மறைப்புடன் அருந்துவது
3. உட்கார்ந்து அருந்துவது
4. வாய்வைத்து அருந்துவது
5. குறைந்த பட்சம் இரண்டு அல்லது மூன்று மிடறுகளாக அருந்துவது.
6. பாத்திரத்தின் உள்ளே பார்த்து விட்டு அருந்துவது
7. அடியில் மண்டியாக உள்ள கடைசி பகுதியை பருகாமல் விட்டு விடுவது.
8. அல்ஹம்துலில்லாஹ் கூறி முடிப்பது.

ஆகியனவற்றைத் தண்ணீர் பருகும்போது கடைபிடிக்க வேண்டும்.

திரவப் பொருளை பருகும் முன் பார்த்து விட்டு அருந்துவதால், மிதக்கின்ற தூசுக்கள் ஏதும் இருந்தால் தென்படும். மூழ்கிக் கிடக்கின்ற சிறுகற்கள், கண்ணாடி துண்டுகள் உலோகதகடுகள் போன்ற வேண்டாத பொருட்கள் ஏதும் இருந்தாலும் கடைசி மண்டியை பருகாமல் விட்டு விடுதல் பாதுகாப்பளிக்கிறது. பாத்திரத்தில் வாய்வைத்து அருந்துவதும், இரண்டு அல்லது மூன்று மிடறுகளாக (குறைந்த பட்சம்) விழுங்குவதும், நாக்கு மற்றும் வாயில் உற்புறச் சுவர்களில் பானங்கள் முழுவதுமாகப் படர்ந்து செல்ல வாய்ப்பாக ஆகிறது.

சுவைகள் மற்றும் ஈரத்தன்மையை உணரும் நரம்பு நுனி மொட்டுகள் இப்பகுதி சுவர்த்திசுக்களில் பரவலாகவும் கூட்டமாகவும் இருக்கின்றன.

எனவே சுவைகளும், ஈரப்பதமும், அடர்த்தியும் முழுமையாக உணரப்படுகின்றன. தாகம் விரைவாகத் தணிகிறது. பசி விரைவாக மறைகிறது.

சூடான பானங்களை பருகுகிறபோது வாயினால் ஊதி (சூட்டை குறைக்க) விடுவது கூடாது என்று நபி (ஸல்) வழிமுறை கூறுகிறது. சூடான பானங்களின் மேற்பரப்பில் வாயினால் ஊதுகிறபோது நுரையீரலில் இருந்து வெளிப்படும் காற்றில் வெளிப்படும் கார்டன்டை ஆக்ஸைடு ($Co_2$) கார்பன் மோனாக்ஸைடாக ($Co$) மாற்றமடைகிறது. இவை பானங்களில் கரைகிறது. இது விஷத்தன்மை

கொண்டதாகும். எனவே சூடான பானங்களைக் கையினால் அகற்றி குளிர்விக்கலாம். இதன் மூலம் நீரின் பயன்களையும் அதன் பயன்பாட்டு முறைகளையும் இறைவன் திருமறையில் கூறிய வழி அறியலாகிறது.

**உடல் தூய்மை**

உடலைப் பாதுகாத்தால் அதன் வழி உயிரும் பாதுகாக்கப்படும், உடல் தூய்மையாகயிருப்பின் அவர்களின் உள்ளமும் தூய்மையாகிவிடும், மேலும் சுத்தம் சோறுபோடும்,' 'கூலானாலும் குளித்துக் குடி' என்றும் பழமொழிகளைக் கூறுவர். சுத்தம் என்பது மனிதனின் அன்றாட வாழ்வில் கடைபிடிக்க வேண்டியதாகும், இஸ்லாம் சுத்தத்தினை தினமும் ஐவேலை தொழுகையின் மூலம் கடைபிடிக்கச் சொல்கிறது. இதனை

“உடலையும், சுற்றுப்புறத்தையும், உடையையும் வசிக்கும் இடத்தையும், தொழில் செய்யுமிடங்களையும், வாழும் நகரினையும் சுற்றுப்புறச் சூழல் என்ற முறையில் உலகம் முழுவதிலும் உட்கொள்கிற உணவையும் எல்லாவற்றுக்கு மேலாக உள்ளத்தையும், பரிசுத்தமாக வைத்திருங்கள் என்று அல்லாஹு வழி காட்டுகிறான்.

அல்லாஹுவின் முன்னால் அணிவகுத்து நிற்கிறவர்கள் மன ஓர்மையோடும். பயபக்தியுடனும் இருக்க வேண்டும்.

ஒரு முஸ்லீம் தினமும் 5 வேளைகளில் தொழுகையின் அணிவகுப்பில் கலந்து கொள்ள வேண்டும். அதனால் உடலும் உள்ளமும் உறுதியடைகின்றன. ஈமான் எனும் இறை நம்பிக்கை மேலும் மேலும் உறுதியடைகிறது. ஒளிபெறுகிறது என்றும் கூறுகிறான்.

> நம்பிக்கை கொண்டவர்களே தொழுகைக்குச் செல்லும் போது உங்கள் முகங்களைக் கழுவிக் கொள்ளுங்கள் தலையில் ஈரத்தைத் தடவிக் கொள்ளுங்கள், கைகளையும் கணுக்கால்களுக்கு மேல் வரை கால்களைக் கழுவிக் கொள்ளுங்கள். நீங்கள் உடலுறவில் கிளர்ச்சியடைந்து உங்கள் உடல் அசுத்த மடைந்திருந்தால் குளித்துக் கொள்ள வேண்டும்.

> நீங்கள் நோய் வாய்ப்பட்டிருந்தாலோ அல்லது மலஜலம் கழித்து விட்டாலோ அல்லது குடலிலிருந்து வாயு (காற்று) பிரிந்தாலோ அல்லது பெண்களை காம இச்சையுடன் தொட்டிருந்தாலோ இவ்வாறு கழுவிக் கொள்ளுங்கள்.
>
> உங்களுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை என்றால் நன்றாகக் காய்ந்த சுத்தமான மணலைக் கொண்டு ஈரமற்ற தூய்மைப்படுத்தல் (தயம்மம்) செய்து கொள்ளுங்கள். முகங்களையும் கைகளையும் மணலைக் கொண்டு தேய்த்துக் கொள்ளுங்கள். அல்லாஹு மார்க்கத்தை உங்களுக்கு கடினமானதாக ஆக்க விரும்பவில்லை. அவன் உங்களைத் தூய்மைப்படுத்தவும் உங்கள் மீது அவனுடைய அருட்கொடைகளை முழுமையாக அருளிடவும் விரும்புகிறான். நீங்கள் நன்றி பாராட்டுபவர்களாக இருந்திட வேண்டும் என்பதற்காக (5:6)
>
> ஓ நம்பிக்கை யாளர்களே! தொழுகையின் போது நீங்கள் கூறுவதை நீங்கள் அறிந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதால் போதையிலிருக்கும் போது (கராப்)[6] தொழாதீர்கள் (4:43)

என்று திருமறையில் இறைவன் சுத்தத்தினைப் பற்றி கூறுகின்றான், உடல் தூய்மை செய்வதன் மூலம் உடலில் ஏற்படக் கூடிய பல நோய்களை தடுத்துக் கொள்ள முடியும், உள்ளத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்ள இயலும், மேலும், நம்மைச் சுற்றியுள்ள, பொது இடங்கள் போன்றவற்றையும் தூய்மையாக வைப்பதன் மூலமாக அதனால் ஏற்படும் பல்வேறு தீமைகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

இப்படி பல்வேறு விதமான அறிவியல் நிலைகளை இறைவன் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னரே முகம்மது நபி (ஸல்) அவர்களுக்கு அருளினான். இதனை, மக்களிடம் உலக முடிவு நாள்வரை அனைத்து மக்களுக்குமாக அனுப்பிவைக்கப்பட்ட இறைவேதம் அல்குர்ஆன் அனைத்து மனிதர்களுக்குமான இறைத்தூதர் இறுதி நபி முஹம்மது நபி (ஸல்) ஆவார்கள்.

இறைவேதத்தை உயர்த்திப் பிடித்து தர்மகாரியங்களில் ஈடுபட்டவர்களாக நேர்மையாக வாழ்பவர்களுக்கு நித்திய மகிழ்ச்சி காத்திருக்கிறது. (92:57)

இறை வேதத்தினை நம்பாது பணக்காரனாக இருந்தும் கஞ்சத்தனமாக வாழ்ந்தானே அவனை கொடிய வேதனையின் பக்கம் அனுப்பிவைப்போம். அவன் வீழ்கிற அந்நாளில் அவனுடைய பணம் அவனுக்கு உதவாது (92:8-11)

அவர்கள் தங்கள் பணத்திலிருந்து தர்மகாரியங்களுக்கு செலவிடுவார்கள் அவர்களே நரக நெருப்பை தவிர்த்துக் கொள்கிறார்கள் (97:17,18)

இவ்வசனத்தின் மூலம் இறைவன் மனிதர்களுக்கு இறைவேதத்தை உயர்த்திப்பிடித்துக் கொள்ளுங்கள் மேலும் கஞ்சத்தனமாகவும் இருக்காதீர்கள் ஏனெனில் கஞ்சத்தனமும், திருமறையின் வழி வாழும் வாழ்க்கையின்மையும் மனிதனை வழி கேட்டில் ஆழ்த்திவிடும், என்கிறான்.

திருமறையின் வசனத்தின் மூலம் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் போன்ற மூன்று காலத்தின் நிகழ்வுகளையும் வெளிப்படுத்திக் காட்டியுள்ளான் இறைவன்.

**முடிவுகள்**

❋ மனிதன் கண்டு பிடிக்கும் புதுமையான சிந்தனைகளை அறிவியல் என்பர். ஆனால் அகிலத்தைப் படைத்து, அதில் பல கோடி உயிரினங்களை உயிர்ப்பித்து, உணவளித்து, காத்துக் கொண்டிருப்பவன் இறைவனே என்பதை இஸ்லாம் நம்புகிறது. அதன் அடிப்படையில் ‘மனிதன் அறியாதவற்றையெல்லாம் கற்றுக் கொடுக்கிறவன் அவனே’ என்ற திருமறை கூற்றின்படி அறிவியலின் தொடக்கம் இறைவனே ஆவான்.

- ‘ஒவ்வொரு அணுவின் எடையும் கூட அல்லாஹ்வின் கட்டுப்பாட்டில் இருக்கிறது எனத் திருமறையில் அணு என்னும் அறிவியல் சிந்தனை இடம் பெற்றுள்ளது.

- ‘பூமி பறவையின் முட்டையைப்போல் ஆக்கப்பட்டிருக்கிறது’ என்பது திருமறையின் அறிவியல் கூற்றாகும்.

- இறைவன் வானத்தையும் பூமியையும் படைத்து, வானத்தில் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் அமைத்ததன் வழி காலம், நேரத்தைக் கணிக்கும் முறையை எடுத்துரைக்கின்றான். இது மனிதனின் கண்டுபிடிப்பில் அறிவியல் ஆகும்.

- இறைவன் உலகத்தை 6 நாட்களில் ‘குன்’ என்ற ஒரு சொல்லின் மூலம் படைத்தான். மனிதன் அறிந்தது, அறியாதது, உயிருள்ளது, உயிரற்றது ஆகிய அனைத்தையும் இறைவன் இணைஇணையாகப் படைத்தாகத் திருமறையில் கூறியுள்ளான்.

- பன்றி இறைச்சி, தானாக இறந்த உயிரிகளின் இறைச்சி, இரத்தம் ஆகியன இஸ்லாம் தடை செய்யப்பட்ட உணவுகளாகும். இதனை அறிவியல் நோக்கில் ஆய்ந்தால் இவ்வுணவுகள் மனிதர்களுக்குத் தீங்கு விளைவிப்பதாகும்.

- தண்ணீர் மற்றும் பாணங்கள் பருகும் போது நபிகள் நாயகம் (ஸல்) கற்றுத்தந்த நெறிமுறைகளைக் கடைபிடித்தல் ஒரு இஸ்லாமியரின் முக்கியக் கடமையாகும். அந்நெறி முறைகளில் அறிவியல் சிந்தனைகள் நிறைந்துள்ளன.

**அடிக்குறிப்புகள்**

1. குன் - ஆகுக.

2. S. உமர் மு∴தார். திருக்குர்ஆன் விஞ்ஞான அற்புதங்கள், ப.8.

3. மேலது. ப.9.

4. மேலது. ப.9.

5. மேலது. ப.11.

6. கராப் - போதையில் இருப்பது.